Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௮] மாற்ப்பலனம்:- துன்முகி௵ மார்கழி௴ ௨௧உ வெள்ளிக்கிழமை (4 JANY. 1957) [இல-௩அ]

# கல்விக் கழகங்களிற் சமயக் கல்வி

——————o——————

## கடமைஉணர்ச்சியுடன் ஆன்ம ஞானம்தரும்

——————:0:——————

### நாட்டு முன்னேற்றத்துக்குள்ள ஒரே ஒரு வழி

முற்றொடர்

ஒருநாட்டின் பாதுகாப்பும் முன்னேற்றமும் மிகுந்த விவேகத்திலும் திடகாத்திரத்திலும் எவ்வளவுக்குத் தங்கியுள்ளனவோ அவ்வளவுக்கு அவை மக்களின் நல்லொழுக்கத்திலும் தங்கியுள்ளன. இக்கூற்றை ஓர் சிறந்த கோட்பாடாக யாவரும் ஒப்புக்கொள்ளுவர். ஆனல் எம் நாடுமுன்னேறுதற்கு இன்றியமையாத உடன்தேவையாக, இவ்வுண்மை மக்கள் மனத்தில் நிலையாகப் பதிக்கப்படுவதை நான் விரும்புகின்றேன். புத்திக் கூர்மையிலும் திடகாத்திரத்திலும் நல்லொழுக்கமே மேலானதாகும். நாட்டின் நல்லாட்சி, சமாதான வாழ்க்கை ஒழுங்கு, பாதுகாப்பு என்பன நிலவுதற்கு நாட்டு மக்களின் ஒரு தொகையினருக்குத் திடகாத்திரமும் விவேகமுமிருந்தால் போதுமானதாகும். ஆனல் ஒருவருடன் ஒருவர் நாள்தோறும் ஒற்றுமையாய் வாழ்ந்து நாடு செழித்து முன்னேறச் செய்தற்கு நாட்டு மக்கள் யாவருககும் நல்லொழுக்கம் விசேட தேவையாயிருக்கின்றது. வாழ்க்கையில் வேண்டப்படும் எல்லாம் வளர்ச்சியடைதற்கு, நல்லொழுக்கமே வித்தாயும் அது இடப்படும் நிலமாயும் அமைகின்றது. நல்லொழுக்க மில்லாவிட்டால் எவ்வித நன்மையும் உண்டாகமாட்டாது. மக்கள் வாய்மை யுள்ளவர்களாயிருந்து ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளை நன்கு மதித்துச்செய்தல் வேண்டும். ஒருவர் மீதொருவர் அன்புள்ளவராயிருந்து ஆன்ம இலாபத்தைச சுயநலனுக்கு மேலாக வைத்தொழுகுதல் வேண்டும். இவை இல்லாவிட்டால் எத்தனை பேர் கற்றவர்களாயிருந்தாலும் எவ்வளவுக்கு மேலான கல்வியைக் கற்றாலும் நாடு முன்னேறமாட்டாது.

எங்கள் முன்னேற்றத் திட்டங்கள் சித்தியடைந்து நாடு செழித்து முன்னேறுதற்கு, இப்பொழுது கற்றவர்களுள்ளே காணப்படுவதிலும்மிகக் கூடுதலாகக் கூர்ந்த கடமை உணர்ச்சி பரந்து பெருகுதல் வேண்டும் என்பதை, ஆராய்ந்தறியத்தக்க விவேகமுள்ள ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுவர். எங்கள நாட்டு நிலைமை திருந்துவதற்கு இலௌகிகமான சுயநலனுக்குப் புறம்பான உண்மை உணர்வு வேண்டப்படுகின்றது. இக்கொள்கையானது விவேக சம்பிரதாய முறையில் ஒப்புக்கொள்ளப்படுவதாயிராது உண்மையாக ஏற்கப்படுவதானல், எங்கள் கல்வி முறையைத் திருத்தி அமைப்பதற்குச் சிறந்த அத்திபாரமாக அது அமைய வேண்டும். ஏனென்றல் எங்கள் பிள்ளைகளை நல்வழியில் வளர்த்தலிலேயே எமது விருப்புச் சித்தியாதல் தங்கியிருக்கிறது. இது செய்யப்படாவிட்டால், நல்லது என்ற ஒன்றைச் சொல்லளவில் ஏற்றுக்கொண்டு, செயலில் கொண்டுவராது, விரும்பத்தகாத வழியில் நாடு செல்வதைப் பார்த்துக் கொண்டு நாம் வாளாவிருப்பதேயாகும்.

எல்லா நாடுகளிலும் எல்லாக் காலத்திலும் நடந்த நிகழ்ச்சிகளை நடுநின்று ஆராய்வோமானல் திடசித்தத்துடன் செயற்கருஞ் சேவைசெய்து சிறப்புற வாழ்ந்து அவற்றுக்காகவே உயிர்துறத்தற்குச் சமயமே மக்களுக்கு உணர்வூட்டி

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அரசியல் அலை

# 1956-ம் ஆண்டுக்கு அவமானம தருவித்தது யார்?

## ம. ஐ மு. ஆதிக்கம் சர்வாதிகாரமாக மாறியதன் விளைவு

இலங்கைச் சரித்திரத்திலே பயங்கரமான பழிபாதகச்செயல் நடைபெற்ற ஒரு காலம் குறிப்பிடப்படவேண்டுமேயானல் அது 1956 என்று எல்லார் மனத்திலும் தோன்றும். தனிப்பட்ட முறையிலே 488 கொலைகள் நடைபெற்றதால் இந்த ஆண்டுக்கு அவமானம் அவ்வளவு வரவில்லை. மொழிக்கொலை, மொழிக்கொலையால் எழுந்த படுகொலை, கலகம், அதனல் உண்டான இனவேற்றுமை என்ற இன்ன பல காரணங்களே 1956-க்கு அந்தப் பழி மொழியை வருவித்தன.

சித்திரைத் தேர்தலிலே வெற்றிபெற்றது ம. ஐ. மு. என்பது உண்மையே. எந்தவிதமாகத் தேர்தற் பிரசாரஞ் செய்யப்பட்டது என்பது யாவருமறிவர். வெற்றியின் பெறுபேறு குரங்கின்கையிற் பூமாலையின் பயன்போல மாறியது. ஆதிக்க ஆணவம் பிரதமரை மட்டுமன்று எல்லா மந்திரிமாரையும் பிரதமராக எண்ணும்படியாகத் தூண்டிவிட்டது. சனநாயகக்கொள்கை ஒருதனிநாயகக் கொள்கையாய் மாறியது. சிங்கள மொழி புத்தமதம் இலங்கையின் அரசத் தனிவரிசை பெற வேண்டுமென்ற கிளர்ச்சி எழுந்தது. சிங்களமொழிச் சட்டம் பகிரங்கமாக இயற்றப்பட்டது. இது இவ்வள

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# சைவசமயமும் பௌத்த சமயமும்

——————o——————

## ஒற்றுமைவேற்றுமை ஆராய்ச்சிக்குறிப்புகள்

அரசாங்க வைத்தியப் பகுதி உதவித் தலைவராயிருந்து இளைப்பாறுகின்றவரும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தலைவருமாகிய **வைத்திய கலாநிதி எஸ். இராமநாதன்** அவர்கள் எழுதியது.

எமது புராதன பெருமை வாய்ந்த சைவ சமயம் சரித்திர காலங்கட்கு முற்பட்டது. இந்து நதிப் பள்ளத்தாக்கில் புதைபொருள் ஆராய்ச்சி நடத்தப்பட்ட போது அங்கே நன்று வகுக்கப்பெற்று அழிந்த நிலையிலுள்ள ஆலயங்களில் சிவலிங்கமும் நந்தியும் காணப்பட்டன. அகழ்வே பொறிக்கப்பட்டிருந்த சித்திர எழுத்துக்களைக் காலஞ்சென்ற வண. ஹேறஸ் அவர்கள் முயன்று வாசித்தபோது முக்கட்கடவுள் என்று குறிக்கப்பட்டிருப்பதை நோக்கினர்.

இது தமிழரின் கடவுளாகிய முக்கண்ணன் எனப்படும் சிவபெருமானையே குறிப்பதாகும். உலகமாதாவாகிய உமாதேவியாரை அக்காலத்தில் வணங்கி வந்தனரென்பதற்கும் சான்றுகள் காணப்பட்டன. சைவம் மற்றைய சமயங்களைப்போலக் குறிக்கப்பட்ட ஒருவரால் தாபிக்கப்பட்டதன்றாயினும், உண்மைப் பொருளாகிய சிவத்தை நாடித் தவஞ்செய்த இருஷிகளும் சித்தர்களும் தாம் அனுபவத்தில் கண்டவற்றை, இதிகாசங்கள் புராணங்கள் முதலிய பூர்வீகக் கிரந்தங்களின்மூலம் நமக்கு அளித்துச் சென்றனர்.

இற்றைக்கு 2500 வருடங்கட்கு முன்பு தோன்றிய கௌதம புத்தர் தமது போதனைகளால் மக்கள் சிந்தையில் ஆராய்வுணர்ச்சியைத் தோற்றுவித்து அவர்கள் விஷயங்களைத் தாமே சிந்தித்து அறியச் செய்தனர். புத்தமகான் தாமே உண்மையை நாடி நிற்பவராகையால், மக்கள் கண்மூடித்தனமாக மற்றையோர் சொல்வதை அப்படியே ஏற்றுவிட வேண்டுமென்பதை அங்கீகரிக்கவில்லை. தாம் சொல்வதன் உண்மையை நன்கு ஆராய்ந்து திருப்தியடையும்படியும் கூறியுள்ளார். அவர் ஒரு தீர்க்கதரிசிபோல் உலகுக்கு ஏகோபித்த பரிசுத்தமான ஏற்பாட்டினைப் போதிக்கத் தாம் அவதரித்தாரெனக் கூறவில்லை; மக்களாயுள்ளோர் எவரும் தமது விவேகத்தைத் துணைக்கொண்டு உண்மையை ஆராய்ந்தறிதற்கு வழியை வகுத்துச் சென்றனர். கிரியைகள் கட்டுப்பாடுகள் என்பனவற்றிலும் பார்க்க சன்மார்க்கமும்நீதியும் அவசியம் என்பதை வற்புறுத்தினர். தருமத்தை மேற்கொண்டு பஞ்சசீலங்களை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# இலங்கை இளைஞர்

## அருள்நெறிமன்ற ஆண்டுவிழா

——————0——————

அகில இலங்கை இளைஞர் அருள் நெறி மன்ற 1-ம் ஆண்டு விழா தை 20-ம் திகதி (20-1-57) வரையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இவ்விழாவுக்கு திருவண்ணமலை ஆதீனத்து மகா சந்நிதானம் தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளாரும், தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டப் பொதுச்செயலாளர் ஸ்ரீ எஸ். மீனுட்சிசுந்தரமுதலியாரும், மதுரை "தமிழ்நாடு" தமிழ்த் தினசரியின் துணை ஆசிரியர் ஸ்ரீ எம். எஸ். பி. சண்முகம் எம். ஏ. அவர்களும் சமுகமளித்து அருள்நெறி விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். ஆண்டு விழா முடிந்தபின் அடிகளார் குழுவினர் திருக்கோணமலை முதலிய தென் இலங்கைப் பகுதிக்குச் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள என அகில இலங்கை இளைஞர் அருள் நெறி மன்றப் பொதுச் செயலாளர் திரு. ஆ. மார்க்கண்டன் அவர்கள் தெரிவிக்கின்ருர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகிஞு மார்கழிமீ உகவ வெள்ளிக்கிழமை

## நில வருமான வரி நீதியானதா?

—:—

மத்திய அரசாங்கத்துக்கும் உள்ளூர் ஆட்சிக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகின்றது. கிராமச் சங்கங்கள் நகர சங்கங்கள் பட்டின சங்கங்கள் மாநகர சங்கங்கள் என்று பலவேறு விதங்களாக உள்ளூர் ஆட்சி நடைபெறுகின்றது. கிராமத்துக்கோ பட்டினத்துக்கோ மாநகரத்துக்கோ வேண்டிய தேவைகளுக்காக வரிகள் விதிக்கப்படுகின்றன. தெரு வீதிகள் ஒழுங்கைகள் சுகாதார ஒழுங்குகள் மருந்துச்சாலைகள் போன்ற வசதிகளைச் செய்வதிலேயே உள்ளூர் ஆட்சிச் சங்கங்கள் முதற்கண் கவனஞ் செலுத்துதல் வேண்டும். ஆகையால் வண்டிவரி, வியாபாரநிலைய வரி, தொழிற் சாலை வரி, சுகாதாரச்சுத்தவரி, சந்தை வரி போன்றவற்றால் உள்ளூர் ஆட்சிச் சங்கங்கள் வருவாயைப் பெறுகின்றன. மேலதிகமான வசதிகளை ஊரவர்களுக்கு உதவுவதற்கு மத்திய அரசாங்கம் பணஉதவி செய்வது வழக்கம். இது நன்கொடையாகவேயமையும். மாநகரங்களிலும், நகரங்களிலும் பட்டினங்களிலும் உள்ள இடங்கள் கட்டிடத்துக்கானவை என்று பிரசித்தப்படுத்தப்பெற்று நிலவருமானவரி விதிப்பதற்குரியனவாகின்றன. இச்சங்கங்கள் சிலவே. இவற்றிற் பன்மடங்காகவுள்ள கிராமச்சங்கங்கள் நிலவருமான வரியை விரும்பினுல் அதை விதிக்கலாம எனறு விதியுண்டு. ஆனுல் அவ்வாறு விதிக்கப்படுதல்இல்லை. காரணம் நாட்டுப் புறங்களிலே வருமான வரி கொடுக்கக்கூடிய வழிவகை யுள்ளவர்களில்லாமையே.

இது ஒரு புறமிருக்க, ாஙகேசன் துறையிலே தொழிற்சாலைக்காகும் மின்சாரசத்தி உள்ளூர்களுக்கும் உபயோகிக்கப்படலாமென்று பொதுசனமும் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் சமூக சேவையாளர்களும் வாதாடியதன் பயனுகக் கிராமங்களுக்கு மின்சாரங் கொடுபடுவதற்கு முடிவு செய்யப்பெற்றது. ஆனுல் மத்திய அரசாங்கத்தின மந்திரியார் ஒருவரின் பொறுப்பிலுள்ள உள்ளூர் ஆட்சிப் பகுதி மின்சாரத்தை அமைக்குஞ் செலவுக்குக் கிராமச்சங்கங்கள் மத்திய அரசாங்கத்திடம் கடன் பெறலாமென்றும் அக்கடனைத் தீர்ப்பதற்கு நில வருமான வரி விதித்தல்வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தது. இதன் பொழிப்பு என்ன என்று ஆராய்ந்து பார்த்தால் மத்திய அரசாங்கம் நேரடியாக நில வருமான வரியை விதிக்காமல் அந்த ஆகாத செயலைக் கிராமச சங்கங்கள் மூலமாகச் செய்வித்து அதற்கு உபகாரமாகக கடன் உதவுகின்றதாகிய சனநாயகத்துக்கு முரண்பாடான கொள்கை புலப்படுகின்றது.

மின்சாரத்தைப் பெறக்கூடிய பண வசதிகளுள்ளவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? மின் விளக்கேற்றி மனைகளை மணி மண்டபங்களாக்கும் நோக்கத்தையுடையவர்கள் அவ்விதமான ஆடம்பர வாழ்க்கையைத் தங்கள் செலவிலே அமைத்துக்கொள்வதற்கு யார் மறுப்பார்கள்? மாத வருமான வளம் உள்ளவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? அவ்வாறில்லாதவர்கள் எத்தனைபேர்? கல் வீட்டில் வசிக்கின்றவர் தொகை யென்ன? மண் மனைகளிற் - குடிசைகளில் வாழ்கின்றவர்எண்என்ன? உள் ஊர்களிலே உளள நிலைமையை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும். அவ்வளவில் மின்சாரவியாபாரம் நின்றுவிடவில்லை. மத்திய அரசாங்கத்திடம் உள்ளூர் ஆட்சி மின்சத்தியை ஒரு விலைக்கு வாங்கி ஊரவர்களுக்குக் கூடுதலான விலைக்கு வழங்குதல் வேண்டும். வீடுகளுக்கு ஒரு விகிதம் வியாபார நிலையங்களுக்கு வேறு விகிதம் கலவி நிலையங்கள் வைத்தியசாலைகள் போன்றவற்றுககு இன்னும் கூடுதலான விகிதம். இம்மட்டா? மின்சாரஞ் செல்வதற்கான கம்பிகள் அவற்றைத் தாங்கும் தூண்கள இணைப்புகள வெளிச்சக் கூடுகள என்ற பல உபகரணங்களையும் அமைப்பதற்கு ஒவ்வொரு கல்வீட்டுக் காரருக்கும எவ்வளவு பணஞ் செலவாகும் என்பது சொல்லாமலே விளங்கும. ஐந்நூறு ரூபாவுடன் இந்த அமைப்பைப் பெற்றுவிடலாம என்று ஆககுறைந்த தொகையை வைததுக கணித்துப் பார்த்தாலும் ஒருவருக்கு அதைவிட மாதவீதம எட்டுரூபாவும் இவற்றைத் தவிர நில வருமான வரிக்குப்பணமும் தேவையாகும். ஆகவே மின்சார வசதியை அரசாங்கச் செலவில் அமைத்துவிட்டு மாதவீதம் செலவாகும் மின்சார சத்திக்குரிய விலையைப் பெற்றுக்கொள்வதென்றுலும் ஆட்சியாளர் உதவி செய்கிருர்கள் என்று ஆறுதல் அடையலாம்.

இன்னும் நிலவருமானம் பெறுகின்றவர்கள் எல்லாரும் மின்சாரம் தேவைப்படுகின்றவர்களா? அன்றியும, பயிர்செய்துவாழ்க்கை நடத்தி, நெற்றி வியர்வை நிலத்தில் விழ வெயிலில் வாடி வதங்குகின்ற ஊரவர்களுக்கு மின்சாரவசதி கொடுகக அரசாங்கம முன் வந்து மின் இணைப்பை உள்ளூர் எங்கும் அமைத்து கமக்காரருக்கு உதவி செய்தாலும் வரி தாருங்கள் என்று கேட்பதற்கு உரிமையிருக்கும். மின்சார இணைபபு மட்டுமன்று நீர் இறைக்கும் இயந்திரமும் பெறவேண்டிய நிலைமையில் இருக்கும் கமக்காரன் நிலவருமானவரி கொடுப்பதற்கு முடியுமா? உடுவிற் கிராமசசங்கம் நிலவருமான வரி விதிக்காமலே மின்சாரம் வழங்குகின்றது. அப்படியிருந்தும் இணுவில் வைத்தியசாலையில் இருந்து மருதயினர் மடம் வரைக்கும் இருமருங்கும்உள்ள ஏராளமான தோட்ட நிலங்களில் ஒன்றிலாவது மின்சார சத்தி உபயோகிக்கப்படவில்லை என்பதை அவ்வழியாற் செல்கின்றவர்கள் காண்பார்கள்.

மத்திய அரசாங்கத்துக்கு வெளிநாடுகள் நன்கொடை, உதவி, கடன் என்ற வகையிற் பணங்கொடுக்கின்றன, உபகரணங்கள் வழங்குகின்றன, இயந்திரங்கள் கொடுக்கின்றன. அந்த வெளி நாடுகள் என்ன நோக்கத்துககாக இந்த உதவியைச் செய்கின்றார்கள்? பொருளாதாரத்திற் பிற்போககான நாடுகள் முன்னேற்றமடைவதற்காகப் பொதுநல சேவையென்ற உணர்ச்சியால் உந்தப்பட்டே சகாயமளிக்கின்றார்கள். ஆனுல் மத்திய அரசாங்கமோ உள்ளூர் ஆட்சிச் சங்கங்களுக்கு ஒரு வகையிலும் உதவி அளிக்க முடியாதென்று மறுக்கிறது. வட்டிக்குப் பணம் கொடுத்து கடன் காரனின் வாழ்கையைப் பங்கப்படுத்தும் கொடையாளி போல இருக்கின்றது மத்திய அரசாங்கம். இவ்விதமாக ஒரு சிறிதும் ஊரவர்களின் நன்மையை உணராத மத்திய அரசாங்கத்துக்குக் கிராமச் சங்கங்கள் புத்தி புகட்ட முடியாதா? ஊரவர்கள் பாடம்படிப்பிக்ககூடாதா? எல்லாக கிராமச் சங்கங்களும் ஒன்று கூடி மின்சாரம் வழங்குவதற்கு உதவும் பணம் நன்கொடையாகவே யமைதல் வேண்டும் என்று வாதாடிப் பொதுநலத்துக்காகவும் உரிமையைப் பெறுவதல்லவா வழி? அரசியல் வாதிகள் பொதுசனத் தொண்டர்கள் சமூக சேவையாளர் இந்த இயக்கத்தை நிறுவுதல் வேண்டும். கிராமசசங்கங்கள் நிலவருமான வரி விதிப்பதை எதிர்த்தல் வேண்டும்.

# எழுத்தாளர்களுக்கு உளத்தூய்மை

## இன்றியமையாது வேண்டப்படுவது

தெல்கிமா நகரில் நடந்த உலக எழுத்தாளர் வட்டமேசை மகாநாட்டில் பண்டிதநேரு அவர்கள் பேசும் போது தங்கள் நூல்களுக்கு உண்மையான மதிப்பு வேண்டுமானுல், எழுத்தாளர் மனத் தூய்மையுடன் இருக்கவேண்டியது அவசியம்' பண்டைககால உலக இலக்கியங்கள் உள்ளத் தூய்மையுடையவைகளாகும். உண்மையை வெளியிட எழுத்தாளன் முயல்வதுதான் உள்ளத் தூய்மையாகும். எழுத்தாளன் காணும் உண்மை முழுமை பெற்றதாக இல்லாமலிருக்கலாம். ஆயினும் அது உண்மையானதுதான் என்று எழுத்தாளன் கருதினுல் அது உண்மை.

தற்காலச் சிக்கல்களுக்கே நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். சிலசமயம் 'தற்காலம்'' நமது கண்ணோட்டத்தைக் குறைக்கிறது. வருங்காலச் சிக்கல்களைப் பார்ப்பதிலிருந்து தற்காலச் சிக்கல்கள் நம்மைத் தடுக்கின்றன. எனவே நமது கண்ணோட்டம் குறுகிவருகிறது. வருங்காலத்தை நினைத்துக்கொண்டு இக்காலச் சிக்கலை எவ்வாறு தீர்க்கப்போகிறோம்? தற்கால இடையூறுகளால் நிலையிழந்துவிடாமல் நமது குறிக்கோளை அடைவது எப்படி? இக்கேள்விகளே ஒவ்வொருவர் மனத்திலும் எழும் கேள்விகள். ஆனுல் பொதுவாகக் கூறப்போனுல் இத்தகைய நிகழ்ச்சிகளினுல் ஒரு எழுத்தாளன் மனம் குலைந்து போய்விட மாட்டான். ஆனுல் நிகழ்ச்சிகளில் ஏற்படும் கிளர்ச்சிகளுக்கு இடங்கொடுத்துவிடாமல் அமைதியுடன் ஒவ்வொன்றையும் நோக்க வேண்டியது எழுத்தாளரின் கடமையாகும். அவ்வாறு கிளர்ச்சிக்கு இடங்கொடுப்பது அரசியல்வாதிகளின் இயல்பாகும்.

நாடுகளின் ஆன்ம இயல்பு, மன இயல்பு, நேர்மை ஆகியவற்றை வெளியிட வேண்டியது எழுத்தாளரின் கடனுகும். உண்ணவும் உறங்கவும் மட்டுமே மக்கள் உயிர் வாழவில்லை என்று கூறினர்,

ஆச்சாரியா விநோபாவில

# பக்திப் பெருக்கு

## மணிவாசகர் பிறந்த ஊர் கொடுத்தால் தமிழ்நாடு கொடுத்ததாகுமாம்

—0—0—

மதுரை மாநகரில் நிலக்கொடை இயக்கத் தொடர்பில் ஆச்சாரியா விநோபாவே அவர்கள் பேசும் போது ஆண்டவனுல் அளிக்கப்பட்ட நிலங்களில் மக்களுக்கு முழுஉரிமை இருக்கவேண்டும். ஆனுல் நாட்டில் அந்த நிலை இருக்கிறதா? வறுமை, பசி பட்டினி போன்ற நிலைதான் அதிகம் இருக்கிறது. அறியாமை. பொறுமை, வஞ்சகம் இவைகள்தான் எங்கும் தலைவிரித்தாடுகின்றன. இல்லாமை, போதாமை என்ற நெருப்பே நாடெங்கிலும் பற்றிஎரிந்துகொண்டிருக்கிறது. இதைத் தணிக்க மக்களுக் கெல்லாம் நிலத்தைப் பகிர்ந்தளிப்பது தான் சிறந்த வழி என்று நான் கருதுகிறேன்.

நிலங்கள் அனைத்தும் மக்களின் உடமையாகும் வரையிலும் அந்த இயக்கம் சரிவர வேலை செய்ய வேண்டும். ஒவ்வொரு தேசியமாநாட்டாரும் நாள் தோறும் மககளின நலனுக்காக தாம் என்ன செய்துள்ளோம் என்பதை எண்ணிப் பார்த்தால் மற்றவர்களைவிட நாம் ஒன்றும் அதிகம் செய்துவிடவில்லை என்பது புலனுகும் ஒரு காரியத்தைச் செய்யும் போது, அந்தக் காரியத்தைப் பலரும் சேர்ந்து செய்ய முன்வந்தால் அதில் வெற்றி கிடைத்துவிடும். கிராம தானத்தைத் தீவிரமாக நடத்திச் செல்ல வேண்டும்.

மதுரை அருகே மாணிக்கவாசகர் பிறந்த ஊராகிய திருவாதவூர் இருக்கிறது. அந்தக் கிராமம் கொடையாகக் கிடைத்தால் தமிழ்நாடே கிடைத்தது போலாகும். மாணிக்கவாசகர் சிறந்த பக்திமான். அவர் பாடல்களை நாள் தோறும் ஒன்று முதல் மூன்று மணி நேரம் வரை படித்து வருகிறேன். அவர் பிறந்த கிராமம் கொடையாகக் கிடைத்தால் மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனுல் தற்சமயம் உள்ள காலமாறுபாட்டினுல் மகான்கள் அவதரித்த மண்ணில் அவர்களுக்கு நேர்மாருன கருத்துக் கொண்டவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

நிலத்தை எல்லாம் தனி உடைமையாக வைத்துக் கொண்டிருப்பது அநீதியாகும். உலகத்திலுள்ள நிலமனைத்தும் மக்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட வேண்டும். 60 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ஒரு புத்தகத்தில் இக்கருத்து இடம்பெற்றிருக்கிறது!

மதுரை மாவட்டத்தில் குறைந்த அளவு 500 கிராமங்களையாவது கொடையாகப்பெற்றுவிடவும், அவ்வாறு கிடைக்கும் கிராமங்களில் கிராம ஆட்சி அமைக்கவும் தேசிய மகாநாட்டார் முன்வர வேண்டும் என்று கூறினர்.

# மாணுக்கர் மதிவள மன்றம்

## குருசீட முறையிலே இலகுபோதம்

———:O:———

[சுப வேளையிற் சுப சகுனங்களுடன் திருவருளின்வழி தோன்றுகின்றது மாணுக்கர்மதிவளமன்றம். பாடசாலைக் கல்விக்கும் சைவசமயப் பரீட்சைக்கும், சைவ வாழ்க்கைக்கும் உதவும் சிறந்த சைவ சமயக் கருத்துக்கள் மாணவர்களுக்குப் பயிற்றும முறையில் இன்று தொடக்கம் இம்மன்றத்தில் அறியக்கூடிய வாய்ப்புண்டாயிருக்கின்றது. இவற்றை மனமுவந்து தர இயைந்தவர் தமிழ்மொழிப் பாண்டியத்துடன் சைவநூலறிவும் பெற்று ஆசிரியத் தொழிலில் அனுபவம் வாய்ந்தவராகலின் சைவமாணவர்க்குத் தனி விருந்தொன்று அமைந்திருக்கிறதென்று திடமாகச் சொல்லுதல் பொருந்தும். சைவ மாணவர்க்கென்று சிறப்பித்துக் கூறப்பெற்றதேயெனினும் சைவமக்கள் யாவரும் இதிற் பங்குபற்றிச் சுவைத்துப் பயன்பெறுதலுமாம். ப—ர்]

### அன்புள்ள மாணுக்கர்களே!

வணக்கம். எங்கள் சமயம் சைவசமயம் சைவசம[illegible] மற்றெல்லாச் சமயங்களின் கருத்துக்களையும் அடக்கி விளக்குகின்றது. "வேறுபடு சைவமெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன, வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா" என்கின்ருர் தாயுமான சுவாமிகள். இப்படியான மகிமை நிறைந்த நமது சமயம் 19-ம் நூற்ருண்டிலே அந்நிய சமயத்தவர்களால் நெருக்கடிக்குள்ளானது. கிறீஸ்தவர்கள் சைவத்திற்குத் தீங்குகள் விளைக்க முயன்றனர். இந்தக் காலத்திலேதான் தோன்றினுர் ஆறுமுகநாவலர் அவர்கள். சைவத்தையும் தமிழையும் வளர்க்க வென்றே தோன்றினவர் அவர். நாவலர் அன்று தோன்ருவிட்டால்—சைவத்தையும் தமிழையும் வளர்க்காவிட்டால், இன்றெல்லாம் நாம் சைவம், தமிழ் என்றெல்லாம் பேச இடமேயில்லை.

தற்காலத்தில் நமக்கு அவரைப்போலத் தலைவர் இல்லை. இக்காலச் சைவ இளைஞர்களுக்கும் கடவுள் பக்தியில் நம்பிக்கை குறைந்து விட்டது. ஏனைய சமய இளைஞர்களிலும் பார்க்க நமது இளைஞர்கள் சமயத்தில் எவ்வளவோகுறைந்துவிட்டனர். சமய அறிவில் வந்தனை வழிபாடுகளில் நாம் எவ்வளவோ குறைந்துவிட்டோம்.

திருத்தொண்டர் புராணத்தில் விளங்கும் நாயன்மார்கள் வாழ்க்கை முறைகள் நமக்குப் போதிப்பதை நாம் உணரவேண்டும். திருநாமம் ஓதுதல், திருவுருவத்தைத் தியானித்தல், எல்லா உயிர்களிலும் இறைவனைக் காணுதல், கடவுளின் படைப்புக்களாகியஉயிர்களுக்குச் சேவை செய்தல், அன்பர் பணி புரிதல், விருந்தோம்புதல், குருபக்தி, அடியார்பக்தி முதலான தெய்வப் பண்புகளையெல்லாம் பெரியபுராணம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. சுருக்கிச் சொன்னுல் சைவசமயத்தின் விழுமிய கோட்பாடுகளை யெல்லாம் அது நமக்கு விளக்கிக் காட்டுகின்றது.

இக்கால இளைஞர்கள் இந்நூலைப் படிப்பதில் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்படவில்லை, "வாடாதே நீ ரோசாப்பூவே" "தென்றலே தென்றலே" என்று பாடுவதில் உள்ள ஆசை "பித்தாபிறை சூடி" என்று படிக்க விரும்புகின்றதாயில்லை. இப்போது காலம் மாறிப்போய்விட்டது. ஆனபடியால் இந்தப் பெரியபுராணத்துச் சில நாயன்மார் சரிதங்களை இலகுவாக விளங்கும்பொருட்டுச் சிறுச்சிறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பாடங்களாக இவ்வாரம் முதலாகப் படிப்போம். முதலாவதாகப் பெரியபுராணம் என்பதுபற்றிச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். நன்கு அவதானித்துக் கொள்ளுதல் வேண்டும்.

#### பெரியபுராணம்

இது செய்யுள் ரூபமாகச் செய்யப்பட்டது சேக்கிழார் சுவாமிகளால். திருத்தொண்டர் திருக் கதைகளைக் கூறுவதால், திருத்தொண்டர் புராணம் எனவும்படும். ஆசிரியர் பாயிரத்தில் ஓரிடத்தில் 'எடுக்குமாக்கதை' என்று இந்த நூலைக் குறிப்பிடுகின்ருர். மா, என்ற சொல், பெருமை எனப் பொருள்படும. கதை என்பது புராணம். எனவே, 'மாக்கதை என்பது பெரியபுராணமாகும். இது ஈர அன்பினில் விளைந்த வீரஅடியார் வாழ்வை—அவர்களின் குறிக்கோளைக் குறிக்கின்றது. இந்த நூலில் 63 நாயன்மார் (தனியடியார், வரலாறுகளும், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார், தில்லைவாழந்தணர் முதலிய தொகையடியார் ஒன்பதின்மர் வரலாறுகளும் உள்ளன நாயன்மார் வடிவங்களைப் பலசிவாலயங்களில் இன்றும் நாம் காணலாகும். எண்ணிறந்த அடியார்கள் கேட்கச் சிதம்பர சபாநாதர் "உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார், தொண்டார்களது அடிமைத்திறத்தை விரித்துப் பாடின புராணம். இது பன்னிரண்டாந் திருமுறை என வழங்கப்படும்.

அடியார்களது வீரம் — தியாகம் — சிவப்பற்று — அருளின் திறன் என்பவற்றைக்காட்டும்ஒருகண்ணுடி. இன்ப ஊற்று இது. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இவை நான்கும் சிவன் திருவருளாற் பாடப்பட்டன. ஆகலின் அவை அருட்பா எனப்படும். சிவாகமங்களில் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும அநுட்டித்த முத்தியடைந்த மெய்யடியார்களின் பெருமையை விளக்குவது. சுந்தரர், அப்பர், சம்பந்தர் தேவாரங்கள் மூவர் அடங்கன்முறை என வழங்கப்படும். இதனைக் கற்ருேரும் மற்ருேருமாகிய யாவருக்கும் எளிதிலே பயன்படுத்தும் நோக்கமாக, நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் வசன ரூபமாகச் செய்தருளினர். அது பெரியபுராண வசனம் எனப்படும்.

#### புராண வரலாறு

பரமசிவன் பார்ப்பதியோடு திருக்கைலாசமலையில் எழுந்தருளியிருந்தார். இது மலையின் அடிவாரத்தில் உபமன்னியுமுனிவர் எண்ணிலா முனிவர் கூட்டம் தம்மைச் சூழ இருந்தார். அப்போது பளிச்செனஒரு வெளிச்சம் தோன்றியது. இதென்ன ஆச்சரியம்! என்ருர்கள் முனிவர்கள்! உடனே எழுந்தார் உபமன்யு முனிவர். திசை நோக்கி வணங்கினுர். விரைந்து நடந்தார். அப்பொழுது முனிவர்கள், "சிவபெருமானை யன்றி எவரையும் வணங்காத நீர் இங்ஙனஞ் செய்வதென்ன என்றனர்.

முனிவர்களே! கேளுங்கள். "சிவபெருமான் தமது திருவுருவத்தைக் கண்ணுடியிலே பார்த்து அழைத்தார். அப்பொழுது

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# மாணவரின் ஒழுங்கீனம்

## காரணமும் நீக்கும் வழியும்

வாரணுசி இந்துபல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கலாநிதி சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள்பேசும்போது மாணவர்களிடையே தோல்வி மனப்பான்மை இருப்பதாலும் சரியான முறையில் வழிகாட்டுபவர்கள் இல்லாததாலும் அவர்களிடையே ஒழுங்கின்மை தோன்றுகிறது.

பல்கலைக் கழகங்களில் சேரும் மாணவர்கள் அங்கு புகட்டப்படும் கல்வியைக் கற்க உண்மையான ஆவலுள்ளவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிடில் கல்வியின் தரம் குறைந்து ஒழுங்கீனம் மலிந்து வருந்து வருகின்றது.

கல்வித் துறையில் மாத்திரமன்றி வேறு வாழ்க்கைத் துறைகளிலும் மாணவர்களுக்கு வழிகாட்டிகளாயிருக்கும் ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியம் அளிக்க வேண்டும்.

கல்வி வளர வேண்டுமானுல் ஒரு பல்கலைக் கழக மாணவர்கள் வேறு பல்கலைக் கழகங்களுக்கும் வெளிநாட்டுக் கல்வி நிலையங்களுக்கும் சென்று தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் மதம் இனம் ஆகியவற்ருல் ஏற்படும் பூசல்களும் சிக்கல்களும் தோன்ரு. இம்முறையை ஆங்கில, பிரெஞ்சு, சொ்மன், இத்தாலிய பல்கலைக் கழகங்கள் கையாளுகின்றன.

இலக்கியம், கலை, விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் ஆகியவற்றின் இருப்பிடமாக ஆங்கிலம் விளங்குகின்றது. அம்மொழியை நாம் புறக்கணித்தால் அறிவுலகில் முக்கிய இடத்தை நாம் பெறமுடியாது.

இசை, நாடகம், வரலாறு, தத்துவம், விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் ஆகியவற்றின் வருங்காலச் சிற்பிகளான மாணவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளிப்பது நம் பல்கலைக்கழகங்களின் கடமையாகும் என்று கூறினர்.

# சிவசமயம் உலகறியச் செய்தார்

———:O:———

## தாமே அனுட்டித்து முன்மாதிரி காட்டிய மகான்

### ஈழநாட்டிலும் இந்தியாவிலும் செய்த சைவத் தொண்டுகள்

( முற்ருெடர் )

சிவப்பிரகாசருக்கும், சிவஞான யோகிகளுக்கும் பின்பு இவ்வளவு தெளிவாகச் சிவ சமயத்தை உலகெலாம் அறிய விளக்கியவர் நாவலரைத் தவிர வேறுயாருமிலர் அவரது சைவ வினுவிடையை ஒரு வேதமெனக் கொள்ளலாம். அதில் சௌசம் செய்வது, பல்விளக்குவது, குளிப்பது, உறங்குவது முதலிய ஒவ்வொரு அனுட்டானத்தையும் தாமே அனுட்டித்து விரிவாக நமக்கு நாவலர் அவர்கள் விளக்கியிருக்கிருர். நூலின் இறுதியில் திருமுறைகளிலிருந்து பாராயணத்திற்கு இனிய தோத்திரங்களைத் திரட்டித் தந்திருக்கிருர். அவர் தொட்டதெல்லாம் நிறைவே; சொன்னதெல்லாம திருமறையே. இன்று சைவத்தைப்பற்றி ஏதாவது தெரியுமானுல், அது நாவலர் சைவத்துக்கு மட்டுமன்றி தமிழுக்குமாக அரிய தொண்டுகள் செய்துதவியதின் பயனுகும். தமிழுக்குக் கண்ணை திருக்குறளை அவரே அழகாகப் பதிப்பித்தார் நாவலர் இன்றேல் பரிமேலழகர் உரையுடன் கூடிய குறளை நாம் அனைவரும் படித்திருக்கமுடியாது. திருக்கோவையாரைப் புலவர்மணிகள் மெச்சும்படி அவர் வெளியிட்டார் தேடிக் கூடக் கிடைக்காத தொல்காப்பியம் சேனவரையர் உரையை ஏட்டுப் பிரதிகள் கொண்டு சோதித்து வெளியிட்டார். நன்னூல் அவராலே தான் திருத்தமாக வெளிவந்து பலருக்கு உதவியது. நாவலர் பதிப்புகளெல்லாம் அக்காலப் பதிப்புகளிற் சிறந்தவை. ஒரு பிழையுமில்லாமல் எழுத்துக்களை அழகாக அடுக்கி நூல் கையடக்கமாயிருக்கும் படி சிக்கனமாக அவர் வெளியிட்டார். தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டென்பது நாவலர் அவர்கள் எண்ணமாகும்.

.................................................

ஆசிரியர் திரு. சி. சிவரத்தினம்

நாவலர் வித்தியாசாலை

.................................................

அக்காலத்திலே தமிழ் நூல்களெல்லாம் செய்யுள் வடிவிலேயே ஆக்கப்பெற்றிருந்தன. அவற்றைக் கற்ருேரல்லாத மற்றையோர் அறியமுடியாதபடி இருந்தது. இக்குறையையுணர்ந்து அந்நூல்களை எளிய வசன நடையில் ஆக்கிக் கொடுத்த முதற் புலவர் இவரே. நாவலர் உரைநடை அரசர். இவரை 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் போற்றுகின்றனர். உரைநடையில் மாத்திரமல்லாது செய்யுள் இயற்றும் திறமையும் உடையவர். ஆனுல் பழைய பதிப் பாடல்களே போதுமானவை என்பது அவரதுகருத்து. தமது நூல்களில் தவருது கணபதி நூலை போடுவார். அவர் பாடிய விநாயகர் வணக்கப் பாவின் நயங்கள் எக்காலத்திலும் மறக்க முடியாதனவாகும்.

"சீர்பூத்த கருவிநூல் உணர்ச்சி
தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க
ளோங்கப்
பார்பூத்த புறச்சமய இருள்க
ணீங்கப்
பரம்பூத்த சைவ நிலை
பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது
தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப்
பிரானுர் தந்த
வார்பூத்த அறிவிச்சை தொழி
லென் ருேதும்
மதம்பூத்த விநாயகன்ருள்
வணங்கி வாழ்வாம்.

என்பது அவர் இயற்றிய சிறந்த கவிகளுள் ஒன்று.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# சிவசமயம்

## உலகறியச் செய்த தீரர்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

**கிளர்ப்புகளும் — பயனும்**

நாவலர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். அவர் உயிருக்கு வரும் ஆபத்திற்கும் அஞ்சப்படாது சமயத்துக்கு உழைத்தவர். புறச்சமய கண்டனங்களாலும் சமூகச் சீர் திருத்தக் கண்டனங்களாலும் அநேகர் இவருடன் பகைமை பாராட்டினர். பாதிரிமாரையும் புறச்சமயங்களையும் கண்டித்ததுடன் சைவ சமயத்திற் படிந்த ஊழல்களையும், வேதாகம நெறிக்கு மாறான பழக்கவழக்கங்களையும் அவர் கண்டித்துப் பேசினர். முதன்மையாகக் கோயிலிற் படிந்த குறைகளைப் பகிரங்கமாக எடுத்துக் காட்டிப்பேசினர்; எழுதினர். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைப்பற்றி அவர் எழுதிய உணர்ச்சிக் கட்டுரைகள் புகழ்பெற்றவை. தாம் கண்ட ஊழல்களைப் பொருத்தமான நிகழ்ச்சிகளைக்கொண்டு அசைக்க முடியாத நியாயத்துடன் உண்மையினின்றும் பிறழாத கோவையுடனும் அவர் வர்ணிக்கும்பொழுது நமது புலவர் சட்டத்தொழில் புரிந்திருந்தால் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பார் என்று தோன்றுகிறது. கோயிலதிகாரிகளுக்கும் கந்தர்மடப் பிரபுவிற்கும் அவர் கொடுத்த சொற் சவுக்கையும் நாம் ஒருபொழுதும் மறந்துவிட முடியாது.

தான்பிறந்த நல்லூரில் இருந்த கந்தசுவாமிகோவிலில் அப்போது சிவாகமத்துக்கு மாறான பல காரியங்கள் நடப்பதைக் கண்ட நமது சைவப் பிரகாசர் மனங்கொதித்தது. அத்தகைய கோயிலில் அவர் நுழைய மறுத்துவிட்டார். சிறப்பாக அக்கோவில்பற்றியும், பொதுவாக நமது சைவ ஆலயங்கள்பற்றியும் அவர் பல சீர் திருத்தக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். சீர்திருத்தமென்றவுடன் கோயிலதிகாரிகள் புலிபோலச் சீறினர். நாவலர் வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் செய்த பிரசங்கங்களிடையே நல்லூர்க் கந்தசுவாமி கோவிற் சீர் திருத்தங்களைப் பற்றியும் அள்ளி வீசுவார். இதனாலே பிற்காலத்தில் கந்தசுவாமி கோவில் திருந்தி நன்மதிப்பைப் பெற ஏதுவாயிருந்தது.

இங்ஙனம் ஈழ நாட்டில் நாவலர் சமயப்பணி செழித்து வளர்ந்தது. இன்னும் பல இடங்களில் பல சைவப் பாடசாலைகள் நிறுவினார்; கோப்பாய் என்னுமிடத்தில் நிறுவிய பாடசாலை இன்றும் நற்பணி புரிந்து வருகின்றது. இன்னும் பலவிடங்களிலும் பாடசாலைகளைத் தொடக்கி அவ்வூரார் பொறுப்பில் கொடுத்தார். அதன் பின்னரே சைவப்பாடசாலைகள் தொகை பெருகி வளர்ந்து வந்திருக்கின்றன; நாவலரின்

தளராத சமயப்பணி இம்மட்டுடன் நிற்கவில்லை.

இந்தியாவிலேயும் வித்தியாசாலை ஸ்தாபிக்க எண்ணி அங்கே சென்றார். சிதம்பரம் சைவர்களுக்கு மூலஸ்தானம் ஆகையால் அவ்விடத்தே ஒரு பெரிய கலாசாலை நிறுவ வேண்டும்; அதனைச் சர்வகலாசாலை ஆக்கவேண்டும் என்பதும் அவரது பேரவா. அங்குள்ளோரது உதவியை நாடினர் அவர்களும் ஓரளவு பொருளுதவினர். அதுகொண்டு அவ்விடத்தேயும் ஓர் பாடசாலை நிறுவி சமயப் பணியும், தமிழ்மொழிவளர்ச்சியும் செய்வித்தார். இவர் சமயப்பணிக்கு மென்மேலும் உதவிகள் வந்துகொண்டிருந்தன. தமிழ் நாட்டு ஆதீனங்களெல்லாம் வாழ்த்தும் நன்கொடையும் அனுப்பின. பல செல்வரும் நன்கொடையளித்தனர். நன் மாணாக்கர்கள் பலர் அங்கு கல்வி கற்க, நான்கு திசைகளிலிருந்துப் வந்து சேர்ந்தனர். இங்கே கருவிநூல்களும் சமய நூல்களும், திருமுறை நூல்களும் முறையாகப் படிப்பிக்கப்பட்டன. சைவர்களுக்கெல்லாம் இவ்வித்தியாசாலை ஞானபீடமாயிருந்தது; இந்தியாவிலும் இவர் சமயப்பணி வெற்றியீட்டியது.

நாவலர் பெருமான் அவர்கள் இங்ஙனமாக ஈழநாட்டிலும் இந்தியாவிலும் தமது சலியாத உழைப்பினால் சைவ சமயத்தை விருத்திசெய்தார். ஆனால் அக்காலம் நாவலரை நன்கு அறிந்திருக்கவில்லை. இன்னும் தக்கமுறையில் கைகொடுத்துதவியிருந்தால் தமிழகம் முழுவதிலும் சைவமணங் கமழக்கூடியதாயிருக்கும்.

அக்காலத்திலே சைவ சமயத்துக்கு இடையூறு வந்தபோது நமது சமயகுரவர்களாகிய நால்வராலும் சைவ சமயமே மெய்ச்சமயமென்று ஸ்தாபிக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து சைவ சமயமும் வளர்ந்து வந்தது. சைவ சமயத்தவர் என்ற ஒரு சமயத்தினரை நிலைக்கச் செய்த பெருமை சமயகுரவர் நால்வரையுமே சாரும். அவர்களின் பின்னர் சைவ சமயங் குன்றிய காலத்தில் சைவங் காத்தவர் நம் ஆறுமுக நாவலர் அவர்களே. இதனால் இவர் 'ஐந்தாங்குரவர்' எனப் போற்றப்படுகின்றார்.

நல்லைநக ராறுமுக நாவலர்
பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே
சுருதி யெங்கே —
எல்லவரும்
ஏத்துபுரா ணகமங்க
ளெங்கே ப்ரசங்க
மெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

(சி. வை. தாமோதரம்பிள்ளை)

மற்றும்.

### ஸ்ரீமத். சுவாமி அவிநாசானந்த அவர்கள் மறைவு

—o—

விசாகபட்டின வைத்திய சாலையில் ஸ்ரீமத் சுவாமி அவிநாசானந்த அவர்கள் சிறிது சுகவீனமாயிருந்து சடுதியாய் மறைந்துவிட்டாரென்னும் துக்க செய்தி அறியவருகின்றது. சுவாமி அவர்கள் 1926-ம் ஆண்டு தொடக்கம் இலங்கை இராமகிருஷ்ண மடத்திலிருந்து பல அரிய சேவைகள் செய்துள்ளார். இலங்கையில் மாத்திரமன்றி இராமகிருஷ்ண மடத் தொண்டுகள் நடக்கும் பிறபல இடங்களிலும் இலங்கையிற் போலவே சிறந்ததொண்டாற்றியவர் என்னும் பாராட்டுக்குரியராயுள்ளார். இவர் இயற்றி வெளியிட்ட 'திருவருள் மொழி' என்னும் நூல் இவருடைய அறிவாழத்தையும் உள்ளத் தூய்மையையும் புலப்படுத்துவதாகும்.

அருள்வழி நின்று அருந்தொண்டாற்றிய அன்னாருக்கு இறைவன் திருவருளால் ஆன்ம சாந்தி உரியதாகின்றது.

சாந்தி. சாந்தி. சாந்தி.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


# எழுத்தாளர்கள் எழுத வேண்டியதென்ன?

## கருத்து வெளியிடுவதிற் கட்டுப்பாடுகூடாது!

தெல்கிமா நகரில் நடந்த எழுத்தாளர் மகாநாட்டில் ஸ்ரீ ச. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பேசும்போது, எழுத்தாளர்களுக்கு சுதந்திரம் என்பது மிகவும் கடினமான சிக்கலாகும். கருத்தை வெளியிடவோ, எழுதவோ சுதந்திர உரிமை இல்லையெனில் எழுத்தாளர்கள் எழுதி என்ன பயன்? எழுத்துச் சுதந்திரம் இல்லாவிட்டால் எழுதுவதில் பொருளே இல்லை. இதனால் ஆபாசமானவைகளையோ அல்லது நாட்டுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிப்பவைகள் குறித்தோ எழுதவேண்டும் என்பது பொருள் அல்ல. கெடுதல் பயக்கும் பொருள்கள்பற்றி எழுத வேண்டுமென்றால் எவ்வளவோ எழுதலாம். எழுத்தில் கட்டுப்பாடுகளை மிகவும் அதிகமாக விதிப்பது சரியல்ல. விநியோகிப்பதற்கு அரிசியோ, கோதுமையோ குறைவாக இருந்தால் நாம் கட்டுப்பாடு விதிக்கலாம். நமது கருத்துக்கு எப்பொழுதாவது பற்றுக்குறை ஏற்படுமா? எழுத்தாளர்கள் கருத்துக்களைச் சுருக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதை மனதால்கூட எண்ணிப்பார்க்கமுடியாது. உத்தரவுகளுக்குக் கீழ்ப் படிந்து கருத்துக்கள்வெளியிடவேண்டிய நிலைமை ஏற்பட்டால் நாம் அடிமைகளாகிவிடுவோம். கட்டுப்பாடில்லாமல் நடந்துகொண்ட எழுத்தாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நாம் கவனிக்கக்கூடாது வேண்டுமானால் அவர்களுக்கும் நாம் அனுதாபம் தெரிவிக்கலாம். மனோதிடம் அளிக்கலாம்.

"இந்தியாவில் எழுத்தாளர்களை எவரும்கட்டுப்படுத்தியதில்லை: இதை எழுது, அதை எழுது என்று உத்தரவிட இங்கு ஒருவருமில்லை. ஆயினும் அனுசரிக்கப்படாத ஒருவகைக் கட்டுப்பாடு இருந்துவருகிறது. இதை நமது இந்திய நண்பர்களுக்காகவே நான் குறிப்பிடுகிறேன். உலக எழுத்தாளர்களை உயர்ந்தவர்கள் என்று நம் நாட்டு எழுத்தாளர்கள் எண்ணிவிடக்கூடாது.

ஒவ்வொரு நாட்டிலும் ஆட்சியில் இருப்பவர்கள் மீது ஒருவகை விசுவாசம் இயற்கையாகவே இருந்து வருகிறது இந்தத் தன்மை அரசாங்க உத்தரவைப் போலவே எழுத்துக்களையும் பாதிக்கிறது. உலகம் எங்கும் நிலவிவரும் இந்த இடையூறுகள் நம் நாட்டிலும் இருந்து வருகின்றன. சுதந்திரமாக எழுதவேண்டும்என்பதே எழுத்தாளரின் முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டும்.

ஓவியக்கலை, சிற்பக்கலை ஆகியவைபோன்று எழுத்துக் கலையும் ஒரு நுண்கலையாகும். எனவே பிரசாரநோக்கம் எதுவுமின்றி நாம் எழுதவேண்டும். இலக்கியத்துடன் இணைந்த ஒருவகை நுணுக்கமான பிரசாரம் இருக்கத்தான்செய்யும். ஆயினும் அந்தப் பிரசாரம் உன்னதமானதாகும். உடனடிக்காரிய அனுகூலங்களுக்காக நாம் எழுதக்கூடாது.

எழுத்தாளர்கள் பரந்த உள்ளத்துடன் இருக்க வேண்டும். அவர்களுக்கு பல்வேறு நோக்கங்கள் உண்டு. குறுகிய மனப்பான்மை கொண்டவர்களைப் பரந்த மனம்கொண்டவர்களாக்குவது அவர்களது குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று கூறினார்.

—

### அமெரிக்க சனாதிபதி

அமெரிக்காவுக்குச்சென்று திரும்பிய பண்டித நேரு அவர்கள் பத்திரிகை நிருபர்கள் கேள்விக்குப் பதிலளிக்கும்போது அமெரிக்க சனாதிபதி ஸ்ரீ ஐசன்ஹோவர் அவர்கள் அடுத்த ஆண்டில் இந்தியாவுக்கு வரச் சம்மதித்துள்ளார்கள் என்று கூறினார். அவர் வருவது எதிரில் வரவிருக்கும் இந்திய பொதுத் தேர்தலின் பின்பேயாகும் என்று குறிப்பிடப்படுகின்றது.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல MB 356.

இராமுப்பிள்ளை கந்தையா
வண்ணார்பண்ணை கிழக்கு
வளககாளி

1 அமரசிங்கம் தில்லைநாதன்
வண்ணார்பண்ணை கிழக்கு
2 காலம்சென்ற செல்லப்பா பாலசிங்கத்தின் ஆதனத்தில்பிரதி திருகோணமலை S. செல்லத்துரை மேற்பார்த்து செல்லப்பா பாலசிங்கம் நாகரத்தினம்.

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B. 356ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1957 ஆண்டு மாசி மாதம் 26 ஆம் திகதி (26-2-57) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபாய் 1293/=உம் இதில் ரூபா 800/= க்கு 15-7-55 தொடககம் 8-5-56 திகதி வரைககும் 100 க்கு பத்து வீத வட்டியும் பின் தீர்வை கூட்டுததொகை இறுபடு வரைக்கும் 100 க்கு ஐந்துவீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 289-25 சதமும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை பாதிரியடி பாதிரிவளவும் ஆதி ஓடை பாதிரியடைப்புந்ளவடையும் மறு பிரிவுகளும் கில, பரஐந்தும் குளி 12¾ லும். பனைகள் செய் பயிர் வான் பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு இளையதம்பி பெண் விசாலாட்சியின் உரிமைக்காறருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு ஒழுங்கையும் தோப்புப்பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனமும், மேற்கு தம்பையாபிள்ளை முத்துசாமி பெண் தில்லை அம்மாவினுதனம். தெற்கு ஆறுமுகம் நடராசாவின் உருமைக்காரரின் ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசியும்அதற்குச் சேர்ந்ததவகளும்.

முற் பதிப்பு. (D. 223/124)

தா. செல்லையா
கொமிஷனர்.
No. 37, Colombogam Road,
Chundikuli, Jaffna.
M. 446 4-1-57 (து 200)

### அரசியல் அலை

—0—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வில் நின்று விடவில்லை. உரிமைப் போராட்டத்தை உடனடியாகத் தொடக்கி விட்டது.

#### கல்லோயாக் கலகம்

கொழும்பிற் சிங்கள மொழிக் கூட்டத்தவர்கள் கட்டுக்கடங்காது நடமாட இடங் கொடுக்கப்பட்டனர். கொலை கொள்ளை என்ற வகையிலே கொடுமை கொழும்புநகரில் மட்டும் நின்று விடவில்லை. கல்லோயாவிலே கயவர் தாண்டவமாடத் தொடங்கினர். படுகொலையும் பழிச்செயல்களும் பட்டப் பகலிலேயே நடைபெற்றன. 1956-ம் ஆண்டின் அநுபவத்தை யார் மறப்பார்? யார்மறைப்பார்.

### அறிவித்தல்

அடைவு நகை விற்பனவு

யாழ்ப்பாணம் 233 K. K. S. ரோடு பெ. அரு. மு. முத்து சாமிச் செட்டியார் அன் சன்ஸ் கடையில் அடைவு வைக்கப்பட்டு தவணை தப்பி துர்முகி ௵ மார்கழி மாதம் 12௨ 26-12 56 புதன் கிழமை காலை 10 மணிக்கு பிரசித்த ஏலத்தில் நடத்த இருந்த விற்பனவை தவிர்க்க முடியாத சில அசந்தர்ப்ப காரணமாக நடாத்த முடியவில்லை. முன் விளம்பரப்படுத்தியபடி, எடுபட்ட நகை புறநீங்கலாக மீதியை துன்முகி ௵ தை ௴ 6-ந் திகதி (19-1-57) சனிக்கிழமை காலை 10 மணிக்கு என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. பசுபதிச் செட்டியார்
வெந்தீஸ் மேஸ்தர்
3—1—57.
M. 441 1, 11-1

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## தமிழ்த் திருநாள்

வரும் தைமாசம் முதலாந் திகதி (14-1-57) திங்கட் கிழமை அரசாங்கப் பொது விடுமுறை நாளாகும். அன்று இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள ஒன்று கூடி இந்நாளைத் தமிழ்ப் பேசும் மக்களின் விசேஷ திருநாளாகக் கொண்டாடுவது உசிதம். உலகில் வெவ்வேறு சமுகத்தாரும், சமயத்தினரும் தங்கள் தங்கள் சமயத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்ற திருநாட்களைக் கொண்டாடுகின்ருர்கள். தமிழ்ப்பேசும் மக்களும், அவ்வண்ணமே இந்தத்திருநாளைக் கொண்டாடவேண்டும். அன்று இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள மத்திய ஸ்தலங்களில், தமிழ்ப் பேசும் மக்கள் கூட்டங்கள் கூடி, கடவுள் வணக்கம் செய்து தமிழும், தமிழ்ப் பேசும் மக்களும், தமிழ் நாடும் உலகில் மேலோங்கி வளர வேண்டுமென்று பிரார்த்தித்து இத்திருநாளைக் கொண்டாடவேண்டும். தமிழுக்கு, சம அந்தஸ்து அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்று பிரேரணைகளும் அக்கூட்டங்களில் நிறைவேற்ற வேண்டும். அப் பிரேரணைகளைப் பிரதம மந்திரிக்கும் தேசாதிபதிக்கும் அனுப்பவேண்டும். தமிழ்ப் பேசும் மக்கள் ஒற்றுமையாக இவ்விலங்கையில்வாழவேண்டும் என்றும், தமிழ்ப் பேசும் மக்களின் தலைவர்களும் ஒற்றுமைப்பட்டு, தமக்கிடையில் உள்ள வித்தியாசங்களைப் பாராட்டாது, தமிழையும், தமிழ்ப்பேசும் மக்களையும், காப்பாற்றவேண்டுமென்றும் வேண்டி, சென்ற வருடம்போல் இந்த வருடமும் இக்கொண்டாட்டத்தை நடத்துமாறு யாவரையும் வேண்டுகின்றோம்.

நா. சேனுதிராசா
யாழ். கமக்காரர்சங்கத் தலைவர்

### வண் - வடகிழக்கு சனசமூக நிலையம்

வண்ணார்பண்ணை வடகிழக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தக்கூட்டம் நிலைய மண்டபத்தில் மார்கழி 24-ந் திகதி திங்கட்கிழமை மாலை திரு. ஆ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சியாகப் புதுவருட உத்தியோகத்தர் பின்வருமாறு தெரிவு செய்யப்பெற்றனர்.

போஷகர்: திரு. மு. கார்த்திகேசு M. M C.

தலைவர்: திரு நா. செல்லப்பா, உபதலைவர்கள்: திரு. த. சேனுதிராசா, திரு. ஆ. கனகரெத்தினம், காரியதரிசி திரு. இ. திருஞானசம்பந்தர், உபகாரியதரிசி திரு. மு. சண்முகம், தனதிகாரி திரு. த. தில்லைராசா, உபதனதிகாரி: திரு. ம. தனபாலசிங்கம், நூல்நிலையப் பொறுப்பாளர் திரு. சி. இராமலிங்கம், உப நூல்நிலையப் பொறுப்பாளர் திரு சி. சரவணனந்தன். கணக்குப் பரிசோதகர்: திரு. P. தப்பு.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திரு. க. ஆனந்தநடராசா திரு. சி. மயில்வாகனம், திரு. து. விக்கினராசா, திரு. வை. கணேசலிங்கம், திரு. மா. விசுவலிங்கம், திரு. மு. யோகேந்திரம், திரு. சி. கணபதிப்பிள்ளை, திரு. சி. காராளசிங்கம், திரு. ந. சின்னப்பா.

## ஈழத் தமிழ் மக்களுக்கு உதவி

### இந்தியா தரும் என்று உறுதிமொழி

தெல்கிமாநகரில் தமிழ் எழுத்தாளருக்கு அளித்த வரவேற்புக் கூட்டத்தில் ஈழகேசரி ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் பேசும்போது இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு மாத்திரம் சேவை செய்தவர்களல்லர். அவர்கள் பல தியாகங்களைச் செய்து இலங்கையின் விடுதலைக்காக ஏனையோருடன் தோளோடு தோள் நின்று போர் செய்தார்கள். இவ்வாறு போர் செய்து விடுதலை பெற்றவர்கள் இப்பொழுது மிக மோசமாக நடத்தப்படுகின்றனர். அன்னியர் ஆட்சிக் காலத்திலிருந்த சமஉரிமை தமிழ் மொழிக்கு இப்பொழுது இல்லாமற் செய்யப்பட்டிருக்கின்றது என்று கூறினர்.

இந்திய நிதிக் குழுத் தலைவர் திரு. கே. சந்தானம் அவர்கள் திரு. அரியரத்தினம் வெளியிட்ட கருத்துக்களைக் குறிப்பிட்டுப்பேசும் போது இலங்கையிலுள்ள தமிழ்மக்கள் மொழிஉரிமை பற்றிக் கொண்டுள்ள கவலையை நாம்அறிவோம். அவர்களுக்கு எங்களாலாகக்கூடிய உதவிகளைச் செய்தற்குப் பின் நிற்க மாட்டோம். இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு இந்தியாவின் உதவி என்றுமேயிருக்கும். இந்தியாவின் உதவி இலங்கைத் தமிழ் மக்களுக்கு என்றுமே இருந்து வரும் என்பதை திரு. அரியரத்தினம்மூலம் இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்குக் கூறவிரும்புகின்றேன் என்று கூறினர்.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிபபது.

[ இவ்வாரப் பலன்கள் 6—1—57 —— 12—1—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

வழக்கத்திலும் பார்க்க இந்த வாரம் வேலை கூடுதலாயிருக்கும். கந்தோரில் சில தொந்தரவுகளுக்கிடமுண்டு. இரகசியப்பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருககவும், பணத்துறையில் ஒரு அளவுககு நல்லவாரம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பக் கருமங்கள் இன்னமும் நிறைவேற்றப்படாதிருக்கும். தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. இவ்வாரத்தின் பின் அரைப்பகுதியில் நண்பரிடமிருந்து உதவியும் இலாபங்களும் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

இந்தவாரம் சிறு குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. உம்முடைய முயற்சிகளை இலகுவாய் ஒழுங்குபண்ண முடியாது வருத்தப்படுவீர். பணத் துறையில் நல்ல வாரம். ஆனல் செலவும் அதிகமாயிருக்கும். நீர் உம்முடைய கடன்களுட் சிலவற்றை நீக்கக்கூடியதாயிருக்கும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

ஞாயிறும் திங்கள் காலையும் உம்மை அதிகம் வேலை குலைக்கக் கூடும், புதுமுயற்சிகள் இடைஞ்சலானவையாயிருக்கும், நீர் கருமங்களைச் செய்து முடிக்க வேண்டுமானல் நண்பரில் அதிகம் தங்கியிருககவேண்டாம்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

வாரத்தின் முதல்நாள் புதுக் கருமங்களுக்கு நல்லதாகும், திங்கள் செவ்வாயும் புதன்காலையும் கவனமாய்க கழிகக வேண்டும. வாககு வாதங்களைத் தவிர்த்து ஆபத்துக்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லதாயிருக்கும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு நல்லவாரம். முன் அரை வாரம் சித்திமிகுந்ததா யிருக்கும். ஆனல் புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி சில இடைஞ்சல்களைத் தரக்கூடும். வார இறுதி திரும்பவும் நன்றாகும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உம்முடைய சகோதர சகோதரிகள் இந்த வாரம் உமக்கு அதிகம் உதவி செய்வார்கள் புது முயற்சிகள் சித்தியடையும். வார இறுதியில் இனத்தவர்களுடன் சண்டைகளைத் தவிர்க்கவும். சில பண நட்டத்துக்குமிடமுண்டு,

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

புதுக்கருமங்களுக்கு நல்லவாரம். வேலை மிகுதியாகி நீர் சிககல்கள் தீர்ப்பதில் அதிக நேரம் செலவழிக்க வேண்டிவரும். வார இறுதியில் தனலாபங்களும் எதிரிகளுக்கு அழிவும் நிச்சயம்,

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்,

பணத்துறையில் நல்லவாரம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். நண்பர் இனத்தவர் விசேடமாகப் பெண்கள் அதிகம் உதவியாயிருப்பர். தூணிகரச் செயலிற் சித்தியும் நிச்சயம்.

**மகராராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

உம்முடைய முயற்சிகள் எல்லாவற்றிலும் நீர் இந்தவாரம் சித்தியடைவீர். போட்டியிடுவோரை வெல்லுதலும் தனலாபமும் நிச்சயம். கடல்கடந்த இடங்களிலிருந்து அல்லது தூரததிலிருக்கும் இனத்தவர்களிடமிருந்து சில நற் செய்திகளுக்கு இடமுண்டு,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

ஒரு குழப்பமான வாரம். ஆனல் குற்றமின்றிச் சித்திபெறுவீர். தனலாபமும் புகழும் நிச்சயம், உம்முடைய நண்பர் சிலரோடு கோபிக்க வேண்டி வரககூடும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

ஒரு நல்லவாரம். உம்முடைய சொந்தக் கருமங்களிற் சில சண்டைகளுண்டாகும். ஆனல் நீர் சித்தி பெறுவது நிச்சயம். வார இறுதியில் தனலாபமும் குடும்ப சமாதானமும் நிச்சயம்.

# கல்விக்கழகங்களிற்.........

1-ம் பக்கத் தொடர்ச்சி

நின்றதென்பதை நாம் தெளிவாகக் காணலாம். ஊக்கம் மிகுந்த ஐக்கிய வாழ்க்கை வாழ்ந்து பொருளாதார சமூக முன்னேற்றஞ்செய்த எல்லா நாட்டு மக்களின் சரித்திரங்களிலும் இவ்வுண்மையைக் காணலாம். உலகிலுள்ள சமயத்திலிருந்து முளைத்தே இவைவளர்ந்தன. பள்ளிக்கூடங்களிலே சமயக் கல்வியை இல்லாமற் செய்வோமாலுல்சென்றபலயுகங்களிலெல்லாம் நல்லொழுக்க விருத்திக்கு எம்முன்னோர் எடுத்தாண்ட ஓர் வழியை நாம் கைவிடுவதேயாகும்.

சில வசதியீனங்களைத் தவிர்த்தற்காகப் பள்ளிக்கூடங்களிலிருந்து சமயக் கல்வியை அகற்ற நாம் விரும்புகின்றோம். ஆனல் அது நாட்டுக்குச் சிறிதும் நன்மையானதொன்றாக மாட்டாது. இப்பொழுது நாட்டில் நிலவிவரும் சமய வாழ்க்கை முறைகளை மூடக்கொள்கையென்று ஊக்கமாகப் பிரசாரஞ் செய்கின்றோம். அதனல் மாணவரின் சமய வாழ்க்கை வீட்டிலுமே இல்லாமற் செய்யப்படுகின்றது. பள்ளிக்கூட நடைமுறைகளே வீட்டிலுள்ள சமய ஒழுக்க முறைகளை இல்லாமற் செய்துவிடுகின்றன. வசதியீனங்கள் ஒருபுறமிருக்க, பள்ளிக்கூடங்களிலூட்டப்படும் பிழையான எண்ணங்கள், குடும்பத்தில் நிகழும் சமய அநுட்டானங்களில் மாணவர் விரும்பி உண்மையாகப் பங்குபற்ற விடாமற் செய்கின்றன. இவ்வாருகச் சமய ஒழுக்கங்கள் அழிந்தொழிந்து போகின்றன. கல்வித் துறைக்குள் வரும் யாவருக்கும் சமயம் என்பதை இல்லாமற் செய்கின்ரேம். இவர்களின் தொகை பெருகி வருவதொன்ருயிருக்கின்றது. பழைய சக்திகள் நீங்கி எங்கள் நிலைமை தவிர்க்க முடியாதபடி இவ்வாறுபாழடைகின்றது.

பள்ளிக்கூடங்களிற் சமயக்கல்வி அவசியந் தேவை என்று நான் வலியுறுத்திக் கூறுகிறேன். பிரித்தானியாவிலே பள்ளிக்கூடங்களிற் சமயக்கல்வி பயிற்றப்படுகின்றது கட்டாயமான கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன.

இந்தியாவிலே சமயம் என்ருல் நாம் அஞ்சுகின்ரேம். இவ்வச்சம் இந்து முஸ்லிம் சண்டைகளினல் உண்டாயுள்ளது. அச்சத்தை அகற்றி உறுதியான சமயக் கொள்கையை மேற்கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. எல்லாச் சமயங்களும் மதிப்பிற்குரியன என்று எங்கள் நாட்டுப்பிதா (காந்தி அடிகள்) எங்களுக்கு அறிவுறுத்தியிருக்கின்ருர். இது அரசியல் வசதிக்காக அவர் உண்டாக்கிய ஓர் கொள்கையல்ல. பகுத்தறிவிலும் எதிர்க்க முடியாத இந்து சமயக் கொள்கைகளிலுமிருந்தெடுத்து அவ்வறிவுரைகளை அவர் எமக்குத் தந்திருக்கின்ருர். ஒவ்வொரு பிள்ளையின் குடும்பத்தாரது சமயக் கல்வியும் அவ்வப்பிள்ளைக்கு ஊட்டப்படுதல் வேண்டும்.

எல்லாச் சமயங்களும், எல்லாச் சமயப்பிரிவுகளும்; சத்தியசீலம், பக்தி, வழிபாடு ஆகியவற்றை வற்புறுத்தி வருவதால் நான்கூறும் வழி யாவருக்கும் ஓர் உயர்ந்த நோக்கத்தை உண்டுபண்ணுவதாகும். நான் குறிப்பிட்டபடி சமயக்கல்வி ஊட்டப்படுமானல் இப்பொழுது கைவிடப்பட்டு வருவதுபோல் கடமை உணர்ச்சியும் ஆன்ம ஞானமுமாகிய கல்வியின் விசேட உறுப்புக்கள் கைவிடப்படமாட்டா. அசுத்தமான உணவைத் தள்ளுவதுபோல் கீழான செயல்களையும் கீழான எண்ணங்களையும் நீக்கத்தக்க முறையிற் பிள்ளைகள் வளர்க்கப்படுதல் வேண்டும்.

பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைகள் போதல்வேண்டும் என்று பொதுக் கட்டுப்பாடு உண்டாக்குகிரேம். இத்துடன் சமய வளர்க்சிக்கும் பொதுக் கட்டுப்பாடு உண்டாக்கவேண்டும். பள்ளிக்கூடங்களிலுள்ள பல்வேறு பிரிவு மாணவருக்கும் ஏற்ற சமயக்கல்வி ஒழுங்குபண்ணப்பட வேண்டும. ஒவ்வொரு பிள்ளையின் தேவைக்கும் இவ்வொழுங்கு ஏற்றதாயிருத்தல் வேண்டும். அப்படிச் செய்தலும், எங்கள் பிள்ளைகள் திடகாத்திரமும் நல்லொழுக்கமும் உள்ளவர்களாய் வளர்ந்து நாடு செழித்து முன்னேறிச் சமானத்டன் வாழச்செய்வார்கள் என்று ஸ்ரீ ச. இராசகோபாலாச்சாரியார்அவர்கள் அக்கருச் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவிலே தொடர்ந்து பேசும்போது கூறினர்.

## மாணக்கர் மதிவளமன்றம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆயிரங்கோடி பிரகாசத்தோடு தோன்றினர். அவர் பெயர் சுந்தரர். சிவபெருமானின் பிரதிவிம்பம். ஆலகால விடத்தைக் கையில் அடக்கிச் சென்று அரனுக்கு அளித்தவர். அவர், எமமாலும்—உம்மாலும் — எவராலும் வணங்கப்படும் பெருந்தகைமையினர்" என்ருர் உபமன்னியு முனிவர்.

இதனைக்கேட்ட முனிவர்கள் "அவரது சரித்திரத்தைக் கேட்கப் பெரிதும் ஆசை கொண்டோம். அடியேங்களுக்கு அருளுதல் வேண்டும் என்ருர்கள். அவருடையது மாத்திரமல்ல — ஏனைய திருத்தொண்டர் சரிதங்களையும் - சர்வான்மாக்களும் உய்யும் பொருட்டுச் சொல்வோம் கேளுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினர். புராணத்தின் வரலாறு இதுவாகும்.

[ ● வளரும்]




# சைவசமயமும் பௌத்த.........

1-ம் பக்கத் தொடர்ச்சி

வகுத்தனர். அவைகள் என்றும் வாழ்க்கையில் ஆர்வத்துடன் தவருது அநுசரிக்கப்படவேண்டியன என்பதையும் புத்தமகான் எடுத்துக்காட்டியுள்ளார். கடவுட் பக்தியிலும் கடமையைச் செய்வதே சிறந்ததென்ருர். உயர்ந்ததென்ருர். உயர்குடிப் பிறப்பிலும் ஒழுக்கமே பெரிதும் ஓம்பப்பட வேண்டும் என்ருர். பிராமணன் உயர்ச்சியடைவது பிறப்பாலன்று; ஒழுக்கமே உயர்ந்த நிலையில் வைக்கின்றது.

எவ் விஷயத்திலும் மிக்க தீவிரமான கொள்கைகளைப் புத்தபெருமான் கைக்கொள்ளாது நடுவழியையே சிறந்ததென மேற்கொண்டனர். அவர் எடுத்துக் கூறிய ஒழுக்கக் கிரமங்கள் நீதிகள் என்பனவற்றைச் சைவசமயம் குறைவின்றி ஏற்றுள்ளது. ஆனல் இவைகளுடன் கடவுட் பக்தியும் சேர்ந்து தொழிற்பட்டாற்ருன் ஆத்ம வீடேற்றம் விரும்பியபடி கைகூடும் என்று சைவசமயம் திடமாக எடுத்து விளக்குகின்றது. கடவுள் அறமே வடிவமாகவுடையவர். தத்துவ ஞானங்களை, கலை ஞானங்களைப் போதிக்குங்கால் புத்தமகான் உலகினைத் தாம் கண்ட அவ்வளவுடன் நின்று விடுகின்றனரேயன்றித் தொடக்கத்தையும் முடிவினையும் ஆராய்ந்தறிய முற்படவில்லை. ஒருவன் செய்யும் ஒவ்வொரு கருமமும் முன் அவன் செய்த வினையின் பயனேயாகும்; இப்போது செய்யுங் கர்மம் இனிமேல் வரப் போகும் இன்னெரு கர்மத்துக்கும் வித்தாகின்றதென்கின்ருர். ஆகவே இப்படிப் பிரவாக அநாதியாகக் கர்மங்கள் மாறி மாறி வந்துகொண்டு செல்கின்றன. எல்லாம் அநிச்சையாகவே (அநித்தியம்) இருக்கின்றன. இந்த நியதியில் கர்மத்துக்குக் காரணமான தனிப்பட்ட ஒரு புருஷனும், பக்திசெய்து வழிபடுதற்குக் கடவுளும் கிடையா. பஞ்ச கந்தங்களின் சேர்க்கையே யன்றி ஆன்மாவென்பது பிரத்தியேகமாக வேறின்றில்லை என்பது புத்த மதக் கொள்கை. தம்மைக் கவலை சூழ்ந்திருப்பதை அவர் கண்டார். அதிலிருந்து விடுவித்துக்கொள்வதே உலகில் வாழ்க்கையின் நோக்காக வேண்டும். கவலை அதாவது துக்கத்துக்குக் காரணம்ஆசையேயென்றும் அதை யறுத்த பின்னரே விடுதலை கிடைக்கின்றதென்றும் கூறுகின்ருர். இந் நிலையை அடைய வேண்டின் விருப்பு வெறுப்பற்றிருக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.

— வளரும்.

### பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

அல்வாய் மேற்கு 1. செல்லையா சீனிவாசகக்குருக்கள்
2. பெண் இராசம்மா
வழக்காளி.

இல. 5546

எதிராக

ஷெயூர் :

1. சி சதாசிவம், 2 பெண் தெய்வானைப்பிள்ளை, 3. கதிர்காமர் சின்னத்தம்பி, 4 வல்லிபுரம் சிதம்பரப்பிள்ளை, 5. கந்தையா கணபதிப்பிள்ளை 6, வேலாயுதர் சிங்கர், 7. சிதம்பரப் பிள்ளை முருகுப்பிள்ளை 8. சி. சிதம்பரப் பிள்ளை 9. பொன்னம்பலம் மாணிக்கதியாகராசா, 10 பெண் தங்கப்பிள்ளை, 11 சிதம்பரப் பிள்ளை நடராசா 12 வ. கதிர்காமத்தம்பி பூதல்வழக்கு தத்துவகாரி, கொழும்பு, வாட்பிளேஸ் செல்லம் கதிர்காமத்தம்பி, 13. முருகர் கதிர்த்தம்பி, 14. இராமச்சங்கம் கட்டைவேலி. 15. கந்தப்பர் வல்லிபுரம். 16 வ. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 17. க. ஆறுமுகம், 18. பெண் மாணிக்கம்,

எதிராளிகள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம், வடமராட்சி கட்டைவேலிக் கோவிற்பற்று திக்கவயல் நெ. ப. 38½ ஷெநெ, ப. 1½. என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமையமேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிககப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1957-ம் ௵ மாசி ௴ 7ம் ௳ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிருர்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
ஒப்பம்: சு. சபாரத்தினம்
சக்கிடுத்தார்.

1956ம் ௵ மார்கழி ௴ 20 ௳
G 306 28- 5-1-57

### கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன் இளையதம்பி மாணிக்கம்.
வழக்காளி.

இல, M B 505

எதிராக

வேலணை மேற்கு சின்னத்துரை கைம்பெண் கண்ணம்மா தானகவும் தனது சிறுபிள்ளைகளுக்கு பராபரிப்புக்காரியாகவும் காலஞ்சென்ற தனது புருஷன் சின்னத்துரையின் ஆதனத்துக்குத் தத்துவகாரியாகவும்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 505 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ௵ தை ௴ 31௳ வியாழக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2721-00ம் இதில் ரூபா 1500/- க்கு 13-9-55 திகதி தொடக்கம் 28-8-56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 9 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் 28-8-56 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவும் ரூபா.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோயிற்பற்று வேலணை மேற்கிறை வேணுக்குள வயல் நெற்பரப்பு 21 குழி ½ எல்லை கிழக்கு ஆறுமுகம் அம்பலவாணர் வடக்கு முருகக்குட்டி பெண் அமிர்தம் மேற்கு வயித்திலிங்கம் மாணிக்கத்தின் உருமைக்காரர் தெற்கு செல்லையா பெண் கண்மணி. இதடங்கலும் கிழக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் இன்னும் கிழக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லை ஒழுங்கையிலிருந்து கிழக்கெல்லைக் காணிக்கூடாகப் பயிர்வகைகளுக்குச் சேதமின்றி வண்டிலாதியன கொண்டு இக் காணிக்குப் போக்குவரவு செய்யுமுரித்தும்.

ஆ. ச. கந்தையா

கொம்மிஷனர்

காரைநகர்
12-12-56.
M 439 4-1-57 (து. 300)

...னமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 4.1 57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.